நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 24 /2025

## P.W. 3 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி )**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சுரேஷ் |
| தந்தை / கணவர் பெயர் | : | பாண்டுரங்கன் |
| கிராமம் | : | மேட்டூர் |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 3** |
| வயது | : | 38 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், அக்டோபர் மாதம், 29–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி காணொளி காட்சி மூலம் ஆஜர் . அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 02.44 PM

1. நான் தற்போது ஆஸ்பத்திரி காலணியில் குடியிருக்கிறேன். நான் லாரி டிரைவராக வேலை செய்கிறேன். எனது அப்பா அ.சா2 பாண்டுரங்கன் எனக்கு போன் செய்து எனது அம்மா அ.சா1 மகேஸ்வரியை எனது தங்கை கணவர்

கார்த்திகேயன் அடித்துவிட்டதாக சுமார் 2 வருடத்திற்கு முன்பாக ஒரு நாள் காலை 11.00 மணிக்கு தகவல் கொடுத்தார்.

2. மருத்துவமனைக்கு கொண்டு செல்வதாக தகவல் சொன்னதன் அடிப்படையில் நான் மேட்டுர் அரசுமருத்துவமனைக்கு சென்று சிசிக்சைக்காக காத்திருந்த எனது அம்மாவை பார்த்தேன். எனது அம்மா தலை எல்லாம் கலைந்து தலை முழுவதும் உடைந்த மிட்டாய்கள் சிதறி இருந்தது. எனது அம்மா உயிர் நாடியை பிடித்து கொண்டு வலிக்குது என்று கத்தி கொண்டு இருந்தார்.

3. அப்போது என்னவென்றுவிசாரித்தபோது எதிரி கார்த்திகேயன் ஒரு பெண்ணுடன் நின்று பேசிக் கொண்டிருந்ததாகவும் அதை பற்றி கேட்டதற்கு வண்டியை கொண்டுவந்து கடைடியின் மீது மோதி கடை வைக்கப்பட்டிருந்த டேபிள் கீழே கவிழ்ந்து விட்டதாகவும், கீழே கிடந்த தேங்காய் மிட்டாயை எடுத்து முகம் , தலை எல்லாம் அடித்துவிட்டதாகவும், அங்கு வைக்கப்பட்டிருந்து அரை கிலோ எடை கல்லை எடுத்து தனது உயிர் நாடி பகுதியில் அடித்துவிட்டதாகவும் என்னிடம் சொன்னார். மேலும் சத்தம் கேட்டு அருகில் இருந்தவர்கள் வந்ததும் தகாத வார்த்தைகளால் திட்டி கொண்டும் குடும்பத்தேயே கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லிவிட்டு பைக்கை எடுத்து கொண்டு சென்றுவிட்டதாகவும் எனது அம்மா என்னிடம் சொன்னார்.

4. எனது அம்மா 7 நாட்கள் மேட்டுர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சம்பவத்தின் போது எனது அப்பா சம்பவ இடத்தில் இல்லை. எனது அப்பா என்ன தகவல்களை என்னிடம் சொன்னாறோ அந்த தகவல்களை குறிபப்பிட்டு தான் சாட்சியம் அளித்துள்ளேன். சம்பவ இடத்திற்கு 20 அடி தூரத்தில் மக்கள் நடமாட்டம் அதிகம் இருக்கும் .அங்கு இருந்து பார்த்தால் சம்பவ இடம் தெரியும். சம்பவ இடத்திலிருந்து கூப்பிட்டால் மேற்படி 20 அடி தூரத்தில் இருக்கும் நபர்களுக்கு கேட்கும் என்றால் சரிதான்.

2. சம்பவம் ஒரு 5 நிமிடம் தான் நடந்து இருக்கும். நான் சொன்னவாறு சம்பவம் நடைபெற்று இருந்தால் 20 அடி தூரத்தில் இருக்கும் பொதுமக்கள் சம்பவ இடத்திற்கு வந்து சம்பவத்தை நேரில் பார்த்து தடுத்திருப்பார்கள் என்றாலும்,

அப்படி நேரில் பார்த்து தடுத்த நபர்களை காவல் துறையினர்கள் சாட்சிகளாக விசாரித்து இருப்பார்கள் என்றாலும், அவ்வாறு நடக்காததால் தான் மேற்படி யாரும் சாட்சிகளாக விசாரணை செய்யபடவில்லை என்றாலும் சரியல்ல. பொதுமக்கள் வந்து தடுத்து உள்ளார்கள்.அவர்களையும் போலீசார் விசாரித்தார்கள்.

3. நான் சொன்னவாறு சம்பவம் நடக்கவில்லை என்றாலும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மருத்துவமனையில் எனது அம்மாவை பார்க்கும்போது இடது கையில் சிராய்ப்பு காயம் இருந்தது. முகத்தில் வீக்கம் இருந்தது. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:—3.11 PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/—நா. கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 24 /2025

## P.W. 4 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி )**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | செங்கோடன் |
| தந்தை / கணவர் பெயர் | : | பழனி |
| கிராமம் | : | நவப்பட்டி |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 4** |
| வயது | : | 50 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், அக்டோபர் மாதம், 29–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி காணொளி மூலம் ஆஜர் . அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 03.13 PM.

1. நான் தற்போது மாதையன்குட்டையில் குடியிருக்கிறேன். நான் டைலராக வேலை செய்கிறேன். சம்பவத்தின்போது அ.சா3 சுரேஸ் என்னுடன் தான் இருந்தார். அவரிடம் சம்பவம் குறித்து அவரது அப்பா தகவல் கொடுத்தார்.

தகவிலன் பேரில் நானும் சுரேசும் மருத்துவமனைக்கு சென்றோம். அவரது அம்மா அவருடைய மருமகன் கார்த்தி அவரை அடித்தாக சொன்னார். கல்லை எடுத்து வயிற்றின் மீது அடித்துவிட்டாக சொல்லி கொண்டிருந்தார். காயங்கள் எதையும் நான் பார்க்கவில்லை.

2. நான் சம்பவ இடத்திற்குபோகவில்லை. போலீசார் மருத்துவமனைக்கு வந்து என்னிடம் கையொப்பம் கேட்டார்கள். நானும், சுரேசும் அதில் கையெழுத்து போட்டோம். எனக்கு படிக்க தெரியாது. நான் கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன எழுதியிருந்து என்று எனக்கு தெரியாது. அந்த சமயத்தில் வேறு யாரும் அங்கு இல்லை. **தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் கேள்விபட்டவாறு சம்பவம் நடைபெற வில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:-03.21PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/-நா. கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**